# தி.மு.க. முப்பெரும் விழா - 2025 (கரூர்)

# விருது பெறுவோர் வாழ்க்கைக் குறிப்புகள்!

## திரு. மருதூர் ஏ. இராமலிங்கம்

### பேராசிரியர் விருது



**க**டலூர் மாவட்டம், புவனகிரி ஒன்றியம், மருதூரில் திரு.வி.என்.ஏகாம்பரம் திருமதி. சாதாரணம் ஆகிய இணையருக்கு மகனாக 1940ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி பிறந்தவர் மருதூர் ஏ.இராமலிங்கம் அவர்கள். தன்னுடைய இளமைப் பருவத்திலேயே அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சொற்பொழிவுகளை கேட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறைவாசம் ஏகினார். அவசரநிலை காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு 26 நாட்கள் சிறைவாசம் அனுபவித்து பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

1969ஆம் ஆண்டு சிதம்பரம் வட்டம், மருதூர் கிளைக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்ற மருதூர் இராமலிங்கம் 1988 முதல் 1992 வரை ஒன்றுபட்ட தென்னார்க்காடு மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், தலைமைக் கழக விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் ஆகிய பொறுப்புகளில் பணியாற்றி, தற்போது தலைமைக் கழக ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

காட்டுமன்னார்கோவில் சட்டப்பேரவை உறுப்பினராக 1977, 1980 மற்றும் 1996ஆம் ஆண்டுகளில் கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றிய இவர், கழக சட்டமன்றக் குழுவின் கொறடாவாக 1996ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு முறை "மணலைக் கயிறாகக் திரித்துவிடலாம். எனது தம்பி மருதூர் இராமலிங்கத்தை என்னிடமிருந்து பிரிக்க முடியாது" என்று பேசியுள்ளார்.

ஏறத்தாழ அறுபது ஆண்டு காலமாக மருதூர் ஊராட்சித் தலைவராக மருதூர் இராமலிங்கம், அவரது துணைவியார், அவரது மகன் என அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்களையே மருதூர் மக்கள் ஊராட்சி மன்ற தலைவர்களாக இன்று வரை தேர்ந்தெடுத்து வருகின்றனர்.

1963ஆம் ஆண்டு ஜீலை 7ஆம் நாள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், தனலட்சுமி அம்மையார் அவர்களைத் திருமணம் செய்து கொண்டார் மருதூர் ராமலிங்கம். இவ்விணையருக்கு அறிவழகன் என்ற மகனும், டாக்டர் மேகலா, சத்தியா ஆகிய இரண்டு மகள்களும் உள்ளனர்.

கழகப் பணியில் தம்மை முழுமையாக இணைத்துக் கொண்டு செயலாற்றி வரும் திரு. மருதூர் இராமலிங்கம் அவர்களின் பணியினை பாராட்டி, தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2025), கரூர், கோடங்கிப்பட்டி, கரூர் பைபாஸ் சாலையில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"பேராசிரியர் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**கரூர்**
**17.09.2025**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## பொங்கலூர் திரு.நா.பழனிசாமி

### (மு.க.ஸ்டாலின் விருது)



**கோ**வை மாவட்டம், சடையபாளையம் கிராமத்தில் திரு.முத்துவேல் நாச்சிமுத்து திருமதி பழனியம்மாள் தம்பதியினரின் மகனாக 2.8.1945ல் பிறந்தவர் பொங்கலூர் நா.பழனிசாமி.

இளம் வயதிலேயே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட கழக முன்னோடிகளின் பேச்சுக்களை கேட்டு, தீவிர கழகப் பற்றாளராகவும், இந்தி எதிர்ப்பாளராகவும் விளங்கினார். 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர். இந்தி மொழித் தேர்வு எழுதவேண்டிய நிலையில், பள்ளித் தேர்வில் இந்தி ஏன் கூடாது என்பதற்கான காரணங்களை இந்தித் தேர்வு பரீட்சைத் தாளில் துணிச்சலுடன் எழுதியவர் பொங்கலூர் நா.பழனிசாமி.

1967ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியில் போட்டியிட்ட திரு. செ. மாதவன் அவர்களை ஆதரித்து தேர்தல் பணியாற்றினார். அதன் விளைவாக, கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டார். பின்னர், அண்ணா தலைமையிலான ஆட்சி அமைந்ததும் மீண்டும் கல்லூரியில் சேர்ந்தார்.

கல்லூரியில் பட்டம் பெற்று ஊர் திரும்பியதும், அப்போது நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். தொடர்ந்து 1971ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பொங்கலூர் தொகுதியில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அக்காலகட்டத்தில் கொங்கு வேளாளர் சமூகத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அக்கோரிக்கையை நிறைவேற்றித் தந்தார்.

அக்காலகட்டத்தில் கோவை மாவட்ட துணைச் செயலாளராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார்.

1993ஆம் ஆண்டில் உட்கட்சி பிரச்சினை எழுந்தபோது, பொங்கலூர் நா.பழனிசாமி அவர்களை கோவை மாவட்டச் செயலாளராக முத்தமிழறிஞர் கலைஞர் அறிவித்தார். 1996, 2006 ஆகிய ஆண்டுகளில் சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று இருமுறையும் அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

இவர் மாவட்டச் செயலாளராகவும், அமைச்சராகவும் இருந்த நேரத்தில் கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டினை மிகச் சிறப்பாக நடத்தி முத்தமிழறிஞர் கலைஞரின் பாராட்டினைப் பெற்றார்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தார். இவரது துணைவியார் விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்களும் கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு தி.மு. கழகத்தின் முதல் பெண் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்தவர்.

இவரது கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2025), கரூர், கோடங்கிப்பட்டி, கரூர் பைபாஸ் சாலையில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **"மு.க.ஸ்டாலின் விருது"** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**கரூர்**
**17.09.2025**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# முரசொலி அறக்கட்டளையின் 'முரசொலி செல்வம் விருது'

## மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன்



**மு**ரசொலி அறக்கட்டளையின் 'முரசொலி செல்வம் விருது' பெறும் ஏ.எஸ். பன்னீர்செல்வன் அவர்கள் - ஊடகத்துறையில் ஐம்பது ஆண்டுகால அனுபவம் பெற்றவர் - 'தி இந்து', 'பிசினஸ் இந்தியா', 'அவுட் லுக்' ஆகிய பத்திரிகைகளில் முக்கியப் பொறுப்புகளை வகித்தவர் - இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் Reuters Fellow-ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்றிய - மாநில அரசு உறவுகள் பற்றி விரிவான ஆய்வை மேற்கொண்டவர், ஆவார். 'தி இந்து' நாளிதழின் ரீடர்ஸ் எடிட்டராக இருந்து ஓய்வு பெற்ற ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்கள் பத்திரிகையாளராக மட்டுமின்றி ஏசியன் காலேஜ் ஆஃப் ஜர்னலிசம் (Asian College of Journalism) என்ற கல்வி நிறுவனத்தின் இணைப் பேராசிரியராகவும் இயங்கி வருபவர்.

இலங்கை, காஷ்மீர் மற்றும் வடகிழக்கு இந்தியப் பகுதிகளில் நிலவிய வன்முறை மோதல்களை அச்சு ஊடகத்திலும் தொலைக்காட்சி ஊடகத்திலும் விரிவாகப் பதிவு செய்த அனுபவம் உடையவர்.

நியூஸ் ஆம்புட்ஸ்மேன் அண்ட் ஸ்டாண்டர்ட்ஸ் எடிட்டர்ஸ்' (News Ombudsmen and Standards Editors) என்ற அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினரான ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்கள், 'குளோபல் ஃபோரம் ஃபார் மீடியா டெவலப்மெண்ட்' (Global Forum for Media Development) என்ற அமைப்பில் 2005 முதல் 2018 வரை நிலைக் குழு உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும் பணியாற்றி உள்ளார். தற்போது ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் Fellow வாக உள்ளார்.

தெற்காசிய ஊடக வளர்ச்சி நிறுவனமான Panos South Asia-வின் நிருவாக இயக்குநராக பத்து ஆண்டுகள் இவர் செயல்பட்டுள்ளார். அதே காலத்தில் Global forum for Media Development-இன் துணைத் தலைவராகப் பணியாற்றிய பன்னீர்செல்வன் - தற்போது, தமிழ்நாடு அரசு புதிதாக நிறுவியுள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் தலைமை இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலை உலகப் புகழ்பெற்ற பெங்குயின் நிறுவனத்திற்காக ஆங்கிலத்தில் "Karunanidhi - A Life" என்ற பெயரில் எழுதியவர் இவர்.

மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்கள் அவுட்லுக், பிஸ்னஸ் இந்தியா மற்றும் முரசொலி வளாகஇதழ்களிலும்பங்களிப்புசெய்தவர். 'சன்' தொலைக்காட்சிநிறுவனத்தில்இவரின்பங்களிப்புகுறிப்பிடத்தக்கது.

முரசொலி செல்வம் அவர்களின் நெருங்கிய நண்பரான இவர் முரசொலி செல்வம் அவர்கள் பெயரில் அமைந்த விருதை அது வழங்கப்படும் முதல் ஆண்டிலேயே பெறுவது மிகப் பொருத்தமானதாகும்.

ஆங்கிலப் புலமையும் தமிழ் எழுத்தாற்றலும் ஒருங்கே அமைந்த சிறந்த பத்திரிக்கையாளரான இவர் தந்தை பெரியாரின் பெண்ணியப் பார்வை கொண்ட செயல்பாட்டாளர்.

**"நாநல மென்னும் நலனுடைமை அந்நலம்**
**யாநலத் துள்ளதூஉம் அன்று!"**
- என்பது குறள்"

சொல்வன்மைக்கு உள்ள சிறப்பு வேறு எதற்குமில்லை. எனவே அது செல்வங்களிலெல்லாம் சிறந்த செல்வமாகும் என்ற வள்ளுவரின் வாய் மொழிக்கேற்ப வாழ்வை அமைத்துக் கொண்ட சிந்தனையாளரான ஏ.எஸ்.பன்னீர்செல்வன், ஒன்றிய அரசு மாநில அரசு உறவுகள் பற்றி ஆய்வு மேற்கொண்டவர்.

பெங்குயின் நிறுவனத்திற்காக முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களின் "உங்களுடன் நான்" என்ற நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

இவருடைய ஆற்றலுக்கு இந்த விருது ஒரு மணிமகுடம் என்றால் அது மிகையல்ல!

இத்தகு சிறப்புகள் வாய்ந்த ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்களுக்கு 2025ஆம் ஆண்டிற்கான 'முரசொலி செல்வம் விருது' வழங்குவதில் முரசொலி அறக்கட்டளை மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது.

**கரூர்**
**17.09.2025**

**முரசொலி அறக்கட்டளை**



சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 1 இலட்சம் பனை விதைகளை இலவசமாக வழங்கி வருகிறார்கள். அதன்படி இந்த ஆண்டிற்கான 1 இலட்சம் பனை விதைகளை திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், ஆகிய 5 மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை 16.09.2025 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து உதவி ஆட்சியர் (பயிற்சி) தவலேந்து, கொடியசைத்து அனுப்பி வைத்தார். உடன் வேளாண்மை இணை இயக்குநர் பூவண்ணன் , தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி.மரகதமணி உட்பட அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### நெல்லை - தென்காசி - தூத்துக்குடி - குமரி - தஞ்சை உள்ளிட்ட

# 5 மாவட்டங்களுக்கு 1 இலட்சம் பனை விதைகள்!

### சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு சார்பில் அனுப்பப்பட்டது!

நெல்லை, செப்.19-

தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 1 இலட்சம் பனை விதைகளை இலவசமாக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி இந்த ஆண்டிற்கான 1 இலட்சம் பனை விதைகளை திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், ஆகிய 5 மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை 16.09.2025 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து உதவி ஆட்சியர் (பயிற்சி) தவலேந்து, கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

பனைமரமானது தமிழ்நாட்டின் மாநில மரமாகும், மழை ஈர்ப்பு மையம், நீர்நிலைகளின் காவலன் என்றெல்லாம் அழைக்கப்படும் பனைமரங்கள் அழிந்து வருகின்றன. அதை காப்பாற்ற ஏரிக்கரைகளிலும், சாலையோரங்களிலும் பனைமரங்கள் வளர்ப்பதற்கு பனைமர பெருக்க திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக ஆண்டுதோறும் அரசிற்கு 1 இலட்சம் பனைவிதைகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் வழங்கி வருகிறார்.

இந்த ஆண்டிற்கு வழங்கப்பட்ட 1 இலட்சம் பனைவிதைகள் 5 மாவட்ட தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்கள் மூலம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

இந்தாண்டு வரை ஆண்டிற்கு 1 இலட்சம் பனை விதைகள் வீதம் 5 இலட்சம் பனைவிதைகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் வழங்கி உள்ளார்.

இந்நிகழ்வின் போது வேளாண்மை இணை இயக்குநர் பூவண்ணன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் திருமதி மரகதமணி உட்பட அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.